பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5·00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 10 ஞாயிற்றுக்கிழமை [27-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 327

# கொக்கட்டிச்சோலையில் 7 படையினர் மரணம்!

## புலிகள் அதிரடித் தாக்கு

யாழ்ப்பாணம், அக்டோபர் 27

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலையில், விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் இராணுவத்தினர் ஏழு பேர் பலியாகினர்.

கொக்கட்டிச்சோலையில் இருந்த மண்முனைக்கு ரோந்து சென்ற இராணுவ அணி ஒன்றின் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில், படையினரிடம் இருந்து பல நவீன ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் — 35 பேர் கொண்ட இராணுவ அணி ஒன்றின் மீது — இந்த அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலின் போது காயமுற்ற படையினரும் ஏனையோரும் அங்கிருந்து

[3 ஆம் பக்கம் பார்க்க]

## இரு வேங்கைகள் களப்பலி

யாழ்ப்பாணம், அக். 27

கொக்கட்டிச்சோலைப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த மோதலில் இரு வீர வேங்கைகள் களப்பலியானார்கள்.

2 ஆவது லெப்டினன்ட் ராம்கி, வீரவேங்கை தவநாதன் ஆகியோரே களப்பலியானவர்கள் ஆவர். (ஒ)

## புலிகள் கைப்பற்றிய நவீனரக ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், அக். 27

கொக்கட்டிச்சோலை தாக்குதலில் ஸ்ரீலங்காப்படையினரிடம் இருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள் வருமாறு:

★ ஏ. கே. எல். எம். ஜி. — 1
★ ரம் மகஸின் — 5
★ ஏ. கே. எல். எம். ஜி. லிங்குகள் — 425
★ ரி 56 - 2 ரகத் துப்பாக்கி — 1
★ ரி 56 - 1 ரகத் துப்பாக்கி — 2
★ ரி 56 பட்மொடல் துப்பாக்கி — 1
★ ஏ. கே. மகஸின் — 19
★ ஏ. கே. ரக துப்பாக்கி ஷெல்கள் — 8
★ நடுத்தர ரவைகள் — 550
★ தொலைத் தொடர்பு கருவி — 1
★ ஜே. ஆர். ரக கிரனேட் — 1

## 'ராவய' பத்திரிகை ஆசிரியர் மீண்டும் விசாரணையில்!

கொழும்பில் அரசுக்கு எதிரான செய்திகளைப் பிரசுரித்து வரும் ''ராவய'' பத்திரிகையின் பணிமனைக்குச் சென்ற பொலிஸார் மீண்டும் அப்பத்திரிகையின் ஆசிரியரை விசாரணைக்கு உட்படுத்தினர்.

சில மாதங்களுக்கு முன்னர் இப்பத்திரிகைப் பணிமனையில் பொலிஸார் தேடுதல் நடத்தியது தெரிந்ததே.

ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணையில் கையொப்பமிட்ட, அரச தரப்பு எம்.பிக்களின் விவரத்தை, அவர்களின் படத்துடன் ''ராவய'' பத்திரிகை கடந்த வாரம் வெளியிட்டது தெரிந்ததே.

அதைஅடுத்தே பத்திரிகை ஆசிரியர் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். (உ-10)

## ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் பதவி அநுராவுக்கு?

கொழும்பு. அக். 27

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக திரு. அநுரா பண்டாரநாயக்கா தெரிவு செய்யப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

கட்சியின் தலைமைப் பதவியைத் தனது மகன் அநுராவிடம் ஒப்படைத்துவிட்டு, அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதற்கும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முடிவு செய்திருப்பதாக கட்சிக்குள் உள்ள விஷயமறிந்த வட்டாரங்கள் தகவல் தெரிவித்ததாக கொழும்பில் இருந்து வெளிவரும் ''திவயின'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தச் செய்தி பல வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

சமீப காலமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இடம் பெற்றுவரும் [illegible]

(ஒ) [illegible]

## வவுனியா ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, அக். 27

வவுனியா மாவட்டத்தில் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களின் நடைமுறையில் இருந்து வந்த ஊரடங்குச் சட்டம் இன்று (ஞாயிறு) காலை 5 மணி முதல் நீக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமை அலுவலகம் நேற்று அறிவித்தது. (உ-எ)

## குருநகர் மீனவர் நால்வர் படையினரிடம் சிக்கினர்?

குருநகர், அக். 27

குருநகரில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை கல்முனைக் கடற் பகுதிக்குச் சென்ற நான்கு மீனவர்கள் இன்னும் திரும்பி வரவில்லை.

இவர்கள் இராணுவத்தினரிடம் சிக்கிக்கொண்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இது குறித்து சம்பந்தப்பட்ட மீனவர்களது உறவினர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் முறையிட்டுள்ளனர்.

குருநகரைச் சேர்ந்த சவிரியான், பட்டுக்கிளி மற்றும் பாஷையூரைச் சேர்ந்த அன்ரன் ஆகியோர் உட்பட நான்கு பேரே காணாமற் போயுள்ளனர். (ஒ-51)

## மண்டைதீவுப் படையினர் மீனவர்களை நோக்கி சூடு!

குருநகர், அக். 27

சிறுத்தீவுக்கு அப்பால் மண்டைதீவுப் பக்கமாக நேற்று அதிகாலை கரைவலைத் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி மண்டைதீவுப் படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர்.

தெய்வாதீனமாக எவரும் காயமின்றித் தப்பிக்கொண்டனர்.

மண்டைதீவு, பூநகரிப் பகுதிகளில் ஸ்ரீலங்காப் படையினர் நிலைகொண்டிருப்பதால், குருநகர், பாஷையூர், கொட்டடி, நாவாந்துறை, மண்டைதீவுப் பகுதிகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான கடற்றொழிலாளர்கள், தொழில் இன்றி பாதிப்படைந்துள்ளனர். (ஒ-51)

## பாஷையூர் மீனவர் இருவர் கடற்படையினரால் கைது

யாழ்ப்பாணம், அக். 27

கடற்றொழிலுக்குச் சென்ற பாஷையூர் மீனவர்கள் இருவரை கடற்படையினர் கைது செய்தனர் என்று தெரிய வருகிறது.

சுந்தர் [19 வயது]. தாவீது [39 வயது] ஆகியோரே அந்த இருவரும் ஆவர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் இருவரையும் கடற்படையினர், மண்டைதீவில் இராணுவத்தினருடன் தங்கியிருக்கும் சமூக விரோதக் கும்பலிடம் ஒப்படைத்துள்ளனர் என்று ஒரு செய்தி தெரிவிக்கிறது.

இதேசமயம் —

பள்ளிக்குடாப் பகுதிக்கு மீன்பிடிக்க சென்ற நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிய வருகிறது. (ஒ)

## மண்ணெண்ணெய் விற்க இனி கட்டுப்பாடு இல்லை!

அத்தியாவசியப் பொருள்களின் பட்டியலிலிருந்து மண்ணெண்ணெய் நீக்கப்பட்டுள்ளது.

விற்பனைக் கட்டுப்பாட்டில் இருந்தும் மண்ணெண்ணெய்க்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தின் திட்டப் பணிப்பாளர் இதனை நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார். (உ)

## ஐந்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களுக்கு மேலதிகமாக பங்கீட்டு உணவு!

யாழ்ப்பாணம், அக். 27

ஐந்து பேருக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் மேலதிக உணவுப் பொருள்கள் வழங்கப்படவிருக்கின்றன.

ஐந்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும், பங்கீட்டு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அளவுக்கு மேலதிகமாக ஒரு கிலோ அரிசியும், 500 கிராம் மாவும் வழங்கப்படும்.

யாழ். செயலகத்தின் திட்டப் பணிப்பாளர் நேற்று இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்தார். [உ]

## அத்தியாவசியப் பொருள்களில் அடங்கும் பால்மா வகைகள்

யாழ்ப்பாணம், அக். 27

அத்தியாவசியப் பொருள்களில் இடம் பெற்றிருக்கும் பால்மா வகைகளில் அங்கர், லக்ரோஜன், நெஸ்பிறே, லக்ஸ்பிறே, எஸ். எம். ஏ. ஆகியவை மட்டுமே அடங்கும்.

இப்பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புவோர், குழந்தையின் பிறப்பை உறுதிப்படுத்தும் ஏதேனும் சான்று ஆவணம் ஒன்றை கிராமிய மட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவிடம் சமர்ப்பித்து, அனுமதி பெற்று, அவற்றைக் கொள்வனவு செய்யலாம்.

—இவ்வாறு யாழ். செயலகத்தினால் நேற்று அறிவிக்கப்பட்டது.

★ தேனீர்க்கடை உரிமையாளர்கள், பலகாரம் சுட்டு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## விற்பனை நிலையங்களை திறக்கக் கோரிக்கை

நெருக்கடியான இன்றைய சூழ்நிலையில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து விற்பனை நிலையங்களும் திறந்து செயற்பட வேண்டும்.

அதேசமயம் தற்காலிகமாக எழுந்துள்ள சூழ்நிலையைப் பயன்படுத்தி பணியாளர் எவரையும் ஆட்குறைப்பு அல்லது வேதனக் குறைப்பு எதனையும் செய்யாது, இன்றைய நெருக்கடி நிலையை வென்றெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கக் கோரியும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ப. நோ. கூ. சங்கத்தினர் மக்களின் தேவையைப் புரிந்து கொண்டு காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, ப. நோ. கூ. சங்கங்கள் அத்தியாவசியப் பண்டங்களை எடுத்துச் செல்கையில், அங்கீகாரம் அளிக்கப்பட்ட படிவம் 14 C, படிவம் 25 ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும் என்றும்—

காவல்துறையினரின் சோதனையின் போது இவற்றைக் காட்டவேண்டும் என்றும் மக்கள் முன்னணி கேட்டுள்ளது. [ஒ]

## தமிழீழ காவல்துறையினர் நேற்று வீதிகளில் சோதனை

யாழ்ப்பாணம், அக். 27

தமிழீழ காவல் துறையினர் நேற்று யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வீதி வழியாக அதிகளவான அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்பவர்களை கண்டுபிடிக்கவே இந்த சோதனை நடவடிக்கை என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## முச்சந்தி முரளி



அப்ப...... பதுக்கின மண்ணெண்ணெய் வீதிக்கு வரும் எண்டு சொல்லுங்கோ ......!

## பெண் பொலீஸாரும் கடமையில்!

யாழ்ப்பாணம், அக். 27

தமிழீழ காவல் துறையின் பெண் பிரிவினர் (பெண் பொலீஸார்) நேற்று யாழ் மாநகர சபைப் பகுதியில் வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

முக்கிய சந்திகளில் சீருடையுடன் அவர்கள் காணப்பட்டனர். [ஒ-3-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணப்பெண் தேவை

யாழ். இந்து. செவ்வாய்க் குற்றமுள்ள [13 பாவம்] கொழும்பில் வேலை செய்யும் 30 வயது B Sc சிவில் எஞ்ஜினியருக்கு மணப்பெண் தேவை மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் [18540]

### நாளை சனி மாற்றம்

நாளை (28 10 - 91) மீண்டும் சனிமாற்றம். ரூபா 7/-எங்கும் விற்பனையாகிறது ரகுநாதர் வாக்கிய பஞ்சாங்கப்படி தனுராசியில் வக்கிர சஞ்சாரமடைந்த சனி திரும்பவும் மகரராசிக்கு மாற்றமடைகிறது. ரகுநாதர் பதிப்பகம், யாழ்ப்பாணம் (18401)

### நீம் தூபம்

மழையுடன் நுளம்புத் தொல்லையும் தொடங்குகிறது. நீம் தூபம் புகைத்து நிம்மதியாக உறங்குங்கள். "மில்க்வைற்," யாழ்ப்பாணம். [சி/0850]


## வவுனியாவில் வட பகுதி பயணிகள்

60 வட பகுதிப் பயணிகள் வவுனியா ரயில் நிலையத்துக்கு சமீபமாகத் தங்கி உள்ளனர் என்றும், இவர்களுக்கான தங்குமிட வசதிகளை வவுனியா அரசாங்க அதிபர் திரு. கி. க. மார்க்கண்டு செய்து வருகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-த]


## அப்பியாசக் கொப்பிகள், பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்

நியாய விலையில் பெற்றுக்கொள்ள

## புஸ்பா அன் கோ

293, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

40 பக்கம், 80 பக்கம், மெனிட்டேன் கொப்பிகளும்; C R. கொப்பிகளும்; On Approval பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு.
(சி 0854)

பற்களுக்கு உகந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள



பற்களைச் சிறந்த முறையில் கட்டிக்கொள்ள

நாடுங்கள்

## பி. ஐ. பர்னாண்டோ

(யாழ் அரசினர் வைத்தியசாலை முன்)
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [சி/0855]

## A/L சித்தியடைந்தோருக்கு ஓர் அரியசந்தர்ப்பம்!!

## விஞ்ஞான / கணித பயிலுனர் ஆசிரியர் சேவை

தமிழ்ப் பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான வெற்றிடங்கள்

### போட்டிப் பரீட்சைக்கான 2 மாத விசேட பயிற்சி வகுப்புகள்

(பல விரிவுரையாளர்களின் இணைந்த சேவை)

பாடநெறி: பொது அறிவு பொது உளச்சார்பு

**ஆரம்பம்: 01-11-91** மு. ப. 9 மணி

**தகைமைகள்:** 18 — 35 வயதிற்கு உட்பட்ட A/L பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி.

**விண்ணப்ப முடிவு திகதி: 11 — 11 — 1991**

(விண்ணப்ப படிவங்களையும், விபரத் திரட்டினையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.)

**விரிவுரைகள்:** பிரிவு I சனி, ஞாயிறு மட்டும்
பிரிவு II வியாழன், வெள்ளி மட்டும்.

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 290/- (முழுப்பயிற்சிக்கும்)

## ASTAN INSTITUTE

1 /10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக் கருகாமையில்)
[சி 0744]


## 90ஆம் நாள் நினைவஞ்சலி



வீர ஜனனம்: 1965 — 10 — 02
வீர மரணம்: 1991 — 07 — 30

ஆனையிறவுத் தாக்குதலின் போது வீரமரணமடைந்த

## லெப்டினட் மயூரன் (அல்பிரட்)

(யோசப்கெனடி - சின்னத்துரை)
(கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை)

தாயகத்தை மீட்பதற்காய் தாய் நாட்டின்
தலையாம் தீவகத்திலிருந்து புறப்பட்டாய்
தாய் மண்ணிற்காய் வீறு கொண்டு எழுந்தாய்
தரணியிலே பரணியொன்று பாடிட வைத்தாய்


தந்தை தாய் பாசத்தை வெறுத்தாய்
தரணியிலே மக்கள் மீது பாசத்தை பொழிந்தாய்
எம் சொந்த மண்ணாம் ஆனையிறவுப் போரிலே
ஐந்நூறு வேங்கைகளுடன்
அல்பிரட்டாய் சேர்ந்தாய்

கண்ணை இமை காப்பது போல்
எம்மினத்தைக் காத்தாய்
மண்ணையும் நேசித்தாய்
மரணத்தையும் யாசித்தாய்
தன்னைத் துறந்த உன்வழியே தரணியிலே
தானையுடன் நாமும் சேர்வோம்
உன் வழி தொடர்வோம்.

– தீவக மக்கள்.

[18550]

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## சண்முகம் வேலாயுதபிள்ளை

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

ஆண்டவன் படைப்பு: 24 - 06 - 1927
அந்நியர் அழிப்பு: 27 - 10 - 1987

**திதி: 11 — 11 — 1991**

குடும்பத்தின் ஒளிவிளக்காக, அன்பின் திருவுருவாக, அறிவின் சுடரொளியாக, முத்தமிழ் வித்தகராக ஊர் புகழ வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். [18520]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒத்திவைப்பு வேளை கேள்வி நாடாளுமன்றில் சர்ச்சை

கொழும்பு, அக். 27
சபை ஒத்திவைப்பு வேளையின் போது கேள்வி எழுப்ப இதுவரை பின்பற்றப்பட்டு வந்த நடைமுறையைத் தொடர்வதா அல்லது இல்லையா என்பது நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் புதியதோர் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

இந்த நடைமுறை தொடர்பாக கட்சித் தலைவர்கள் கூடி தீர்மானித்த பின்னரே எதுவும் செய்யலாம் என பிரதி சபாநாயகர் அறிவித்து கேள்விகள் இல்லாமலேயே சபையை ஒத்தி வைத்தார். [இ-த]

# இந்தியாவின் வெளியுறவு செயலாளராக டிக்ஸிற்

இந்திய வெளியுறவு அமைச்சின் புதிய செயலாளராக யோகேந்திரநாத் டிக்ஸிற் நவம்பர் 30ஆம் திகதி பதவி ஏற்பார் என்று அறிவிக்கப்படுகிறது.

தற்போதைய செயலாளர் முஜ்தந் துபே நவம்பர் 30 ஆம் திகதி ஓய்வு பெறுகிறார்.

டிக்ஸிற் தற்போது பாகிஸ்தானில் தூதுவராக இருந்து வருகிறார். அதற்கு முன்னர் ஸ்ரீலங்காவில் இந்தியத் தூதராகப் பணி புரிந்தவர். அவரது காலத்திலேயே இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. [த]

# கொழும்பில் தாக்குதல் நடக்கலாம் என எச்சரிக்கை

கொழும்பு, அக். 27
விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக பல பின்னடைவுகளை சந்தித்துள்ளதால் கொழும்பில் மக்கள் நடமாடும் பகுதிகளில் அவர்கள் தாக்குதல் நடத்த முயற்சிக்கலாம்.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. கிறில் ரணதுங்க தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது

கொழும்பில் நடைபெறவிருக்கும் சார்க் மாநாட்டை ஒட்டி கொழும்பு மாவட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயக் கூட்டப்பட்ட கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். [இ-த]

## நவம்பர் 12 இல் வரவு செலவு திட்டம்

கொழும்பு, அக். 27
நவம்பர் 12ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் நிதியமைச்சரான பிரதமர் டி பி விஜேதுங்க வரவு செலவுத் திட்ட உரையை அன்று பிற்பகல் 4 மணிக்கு நிகழ்த்துவார்.

நாடாளுமன்றம் அடுத்த மாதம் 12 ஆம் திகதியே கூடும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (த)

## போதைப் பொருள் விவகாரம்:

# சீனாவில் 35 பேருக்கு பகிரங்க மரணதண்டனை!

பீகிங், அக். 27
சீனாவில் போதைவஸ்துடன் தொடர்புடைய 35 பேர் குற்றவாளிகளாகக் காணப்பட்டு மக்கள் முன்னிலையில் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

யுனான் மாநிலத்தில் குலாம் நகரில் 40 ஆயிரம் மக்கள் திரண்டிருந்த சமயம் இந்தப் பகிரங்க விசாரணை இடம்பெற்றது.

விசாரணை நடந்து முடிந்த கையோடு, குற்றவாளிகள் 35 பேரும் அந்தக் கூட்டத்தினரின் முன்னால் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அவ்விடத்தில் வைத்து 5 தொன் போதைப்பொருள்களும் தீக்கிரையாக்கப்பட்டன.

சீனாவில் இதே போன்ற குற்றங்கள் தொடர்புடைய 14 பகிரங்க விசாரணைகள் நடைபெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

## அம்பாறையில் மோதல்

கொழும்பு, அக். 27
அம்பாறைப் பகுதியிலும் நேற்று முன்தினம் ஸ்ரீலங்காப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல்சம்பவம் இடம்பெற்றதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

இந்தச் சம்பவத்தில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து ஏதும் தெரியவரவில்லை. (ஒ-3)

## வெட்டுக்கு இலக்கானார்கள்

தென்மராட்சி, அக். 27
விதிச்சண்டையை விலக்குப் பிடித்தவர்கள் வெட்டுக் காயங்களுக்கு இலக்கானார்கள் கடந்த வியாழக்கிழமை வரணி நாவற்காட்டுப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

பகலில் இடம் பெற்ற சண்டையை இவர்கள் தீர்த்து வைக்க முயன்றதாகவும், பின்னர் இரவு இவர்கள் இருவரும் சைக்கிளில் வரும் போது சண்டையில் ஈடுபட்ட ஒரு பகுதியினர் இவர்களை மறைந்திருந்து வெட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-117)

## அறிவிப்பு

குவைத்துக்கு இலங்கையிலிருந்து வீட்டுப் பணிப்பெண்கள் அனுப்புவதை நிறுத்துமாறு குவைத் அரசு இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளது.

## நுகர்வோர்குழு கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 27
யாழ். மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களைப் பங்கீட்டு அடிப்படையில் வழங்குவது தொடர்பாக செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து ஆராய்வதற்கும்—

அது தொடர்பான நடவடிக்கைகளை வகுத்துக் கொள்வதற்குமாக உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்கள் நாளை பிற்பகல் 3 மணிக்குக் கூடும்

யாழ். திட்டப் பணிப்பாளர் இத்தகவலை நேற்று வெளியிட்டார். [உ]

# உதயன்

## மீண்டும் ஒரு சோதனையா?

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது மீது மீண்டும் ஒரு முறை நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் ஆயத்தம் செய்து வருகின்றன.

இம்மாதம் பத்தாம் திகதி கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லாப் பிரேரணை தோல்வி அடைந்த பின்னர், எதிர்க்கட்சியினர் சபாநாயகரை அவமரியாதையாகவும், கௌரவக் குறைவாகவும் நடத்துகின்றனர்.

எனினும் தமது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டியதில்லை என்ற மனப்போக்குடன் சபாநாயகர் செயற்படுவதாகத் தோன்றுகிறது. தம்மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி அடைந்திருப்பினும் கூட, சபாநாயகர் பதவி விலகி இருக்க வேண்டும். அதுவே கனவான் தனமும், சரியான நடைமுறையுமாக இருந்திருக்கும்.

சபாநாயகருக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவரப்பட்டதோடு, அவர் சபையில் உள்ள குறிப்பிட்ட எண்ணிக்கையான உறுப்பினர்களின் நம்பிக்கையை இழந்து விட்டார் என்பதே அர்த்தம். அதன் பின்னர் அவர் தமது பதவிக்குரிய கடமைகளை பாரபட்சம் இன்றி, விருப்பு வெறுப்பின்றி நடுவுநிலைமையுடன் ஆற்றுவார் என்று எதிர்பார்க்க முடியாது.

எனினும் இத்தனை அவமரியாதைகள், கௌரவக் குறைவுகளின் பின்னரும் சபாநாயகர் இன்னமும் தமது பதவியை ராஜினாமாச் செய்ய முன்வரவில்லை. அவர் ராஜினாமாச் செய்வதற்கு முன் வந்தாற்கூட, அரசாங்கத் தரப்பினர் அனுமதிக்க மாட்டார்கள் போலத் தெரிகிறது!

பதிய சபாநாயகர் தெரிவு ஒன்று நடைபெறும் பட்சத்தில், எதிரணியைச் சேர்ந்த ஒருவர் அப்பதவிக்கு வரக்கூடும் என்ற அச்சம் அரச தரப்பினருக்கு உண்டு. அவ்வாறு நிகழ்ந்துவிட்டால், அது தமக்குப் பெரும் பாதகமாகி விடும் என்று அவர்கள் கருதுவது இயல்பே.

அதனால் தான், அரசினர் எப்படியேனும் தொடர்ந்தும் முகம்மதுவை சபாநாயகராக வைத்திருக்க விரும்புகிறார்கள். ஆனால் நாடாளுமன்றம் கூடும் நாட்களில் எதிர்க்கட்சியினர் நடந்து கொள்ளும் முறை சபாநாயகரை ஆத்திர மூட்டும் விதத்திலும், அவர் பதவியை விட்டு விலகத் தூண்டும் வகையிலும் அமைந்துள்ளது.

அதுவும் பலனளிக்கவில்லை என்று கண்டதாலேயே எதிரணியினர் மீண்டும் ஒரு முறை முகம்மது மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வர ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

ஆனால் நாடாளுமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடர் முடிவதற்கு முன் முதலில் தோல்வி கண்ட பிரேரணையை மீண்டும் கொண்டு வர முடியாது என்பது ஒழுங்கு விதி.

எப்படியோ, இது அல்ஹாஜ் முகமதுவுக்கு தனியவன்றி, அரசாங்கத்துக்கே பெரும் சோதனையாகும். அதன் பலத்தை எடைபோட்டுப் பகிரங்கப்படுத்தும் ஒரு திட்டமாகும்.

அப்படியொரு இக்கட்டான நிலைமை தோன்றும் போது தமிழ் முஸ்லிம் எம்பிக்களின் ஆதரவு அரசுக்கு மிகவும் தேவைப்படும்.

## நாடாளுமன்றத்திற்கு இரண்டாவது பேரவை

### 2 மாதங்களில் இறுதி முடிவு

கொழும்பு, அக். 27

★ மனித உரிமை ஆணைக்குழு ஒன்றை நிறுவுவது தொடர்பாக அரசமைப்புக்கு 17 ஆவது திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவது.

★ நாடாளுமன்றத்திற்கு இரண்டாவது பேரவை ஒன்றை அமைத்தல்..

— இந்த இரு விடயங்கள் தொடர்பாகவும் இரு மாதங்களுக்குள் — இவ்வாண்டு முடிவதற்கு முன்னர் — தீர்மானம் எடுக்கப்படவேண்டும் என்று அனைத்து அரசியல் கட்சிகள் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

சர்வ கட்சி மாநாடுபற்றிய விவரங்களை மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டின் முழு நிறைவான கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் சாகுல் ஹமீது தலைமையில் நடைபெற்றது. [உ-எ]

## மிதிவெடியில் கால் இழந்தார்

யாழ்ப்பாணம், அக். 27

கீரிமலை கூவில் பகுதியில் உள்ள தமது வீட்டைப் பார்வையிடச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்கி வலது காலை இழந்தார்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

இளவாலையில் தங்கி இருக்கும் வேலன் கதிர்காமத்தம்பி [40 வயது] என்பவரே காலை இழந்தவர் ஆவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [ஒ-15]

## பூநகரி ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், அக். 27

பூநகரி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் பணியாளர்கள், நிரந்தர அங்கத்தவர்கள் ஆகியோரை கிளிநொச்சியில் இயங்கும் தற்காலிக அலுவலகத்துக்கு எதிர்வரும் 30 திகதி முதல் சமூகம் தருமாறும்—

யாழ். மாவட்டத்தில் வசிப்பவர்களை வடமாகாண தெ. ப. பொ. கூ. சமாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பொது முகாமையாளர் கேட்டுள்ளார். [ஒ]

## விசர்நாய்க்கடி தடுப்பூசி இல்லை

யாழ்ப்பாணம், அக். 27

யாழ். போதனா வைத்தியசாலையில் விசர்நாய்க் கடிக்கான தடுப்பூசி மருந்து (ஏ. ஆர். வி.) முடிவடைந்துவிட்டது.

இதனால் விசர்நாய்க்கடிக்குள்ளாகி ஆஸ்பத்திரிக்கு வருபவர்கள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

கடந்த மாதம் தடுப்பூசி மருந்து வழமையைவிடக் குறைவாகவே அனுப்பப்பட்டிருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவிலும் இம்மருந்து முடிவுற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-15]

## தர்மப் பணக் கொடுப்பனவு

காங்கேசன்துறை, அக். 27

வலி. வடக்குப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஆகஸ்ட்மாத பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவு நாளை தொடக்கம் எதிர்வரும் முலலாம் திகதிவரை வழங்கப்படும்,

வலி - வடக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் வைத்து இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று உதவி அரச அதிபர் அறிவித்துள்ளார். [ஒ-68]

## சுகாதார அதிகாரிகள் 7பேர் சுட்டுக் கொலை!

### சீக்கிய தீவிரவாதிகள் கைவரிசை

சண்டிகார், அக். 27

பஞ்சாப் மாநிலம், லூதியானாவில்நேற்று முற்பகல் 11-30 மணியளவில் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் ஏழுபேர் சீக்கியத் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் சுகாதாரத் திணைக்களத் தலைமை இயக்குநர் ஆவார்.

கிராமப்புற மருத்துவமனைகளின் வளர்ச்சிப் பணிகள் பற்றி நேர்முக பரிசீலனை செய்துவிட்டு ஜீப் ஒன்றில் திரும்பிக்கொண்டிருந்த மேற்படி அதிகாரிகள் குருத்துவாரம் ஒன்றில் வழிபாடு நடத்தச் சென்றனர்.

அங்கு வழிபாட்டை முடித்துக்கொண்டு, ஜீப்பில் ஏற முயன்ற அவர்கள் அனைவரும் திடீரென அங்குவந்த தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பின்னர் தீவிரவாதிகள் அதிகாரிகள் வந்த ஜீப்பில் ஏறித் தலைமறைவாகி விட்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மாநிலத்தின் வேறு பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களில் ஒரு தீவிரவாதி உட்பட ஒன்பதுபேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [...]

ஸ்ரீபெரும்புதூரில் கடமை தவறிய

## 2 பொலீஸ் அதிகாரிகளின் இடை நிறுத்த உத்தரவு ரத்து

சென்னை, அக். 27

ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்திகொலை செய்யப்பட்டபோது கடமை தவறிய தற்காக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட 2 பொலீஸ் அதிகாரிகளின் இடைநிறுத்த உத்தரவை மாநில நிர்வாக நடுவர் மன்றம் ரத்துச்செய்துள்ளது.

ராஜீவ் கொலை தொடர்பாக மொத்தம் 18 பொலீஸ் அதிகாரிகளை தமிழக அரசு தற்காலிக வேலை நீக்கம் செய்திருந்தது.

அவர்களில் 8 பேர் நடுவர் மன்றத்திடம் முறையிட்டிருந்தனர். எஞ்சியுள்ள பொலீஸ் அதிகாரிகள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகளை ஜனவரி 15 ஆம் திகதிக்குள் நிறைவேற்றி முடிக்குமாறும், இல்லாவிட்டால் அவர்களின் இடைநிறுத்தஉத்தரவு ரத்து செய்யப்பட்டுவிடும் என்றும் தமிழக அரசிடம் நடுவர் மன்றம் கூறியுள்ளது. [த]

## ஸ்ரீலங்கா....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளுக்கு தாயாரும் மகனும் கருத்து வேற்றுமை கொண்டு எதிரணிகளாகப் பிரிந்து செயற்படுவதே முக்கிய காரணமாகும்.

அதன் விளைவாகவே திரு. அனுராவின் ஆதரவாளரான திரு. சூரியப்பெருமா செயலாளர் பதவியில் இருந்து திருமதி பண்டாரநாயக்காவால் நீக்கப்பட்டிருந்தார்.

அவரது இடத்துக்கு திருமதி பண்டாரநாயக்கா தமது நெருங்கிய உறவினரும், தீவிர ஆதரவாளருமான அனுருத்த ரத்வத்தையைத் தெரிவு செய்வதற்கு உத்தேசித்து அதற்கேற்ற விதத்தில் செயலாற்றி வந்தார்.

### ஏமாற்றம்

எனினும் இம்மாதம் 21 ஆம் திகதி நடந்த கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் திரு. அனுரா பண்டாரநாயக்கா பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இது, திருமதி பண்டாரநாயக்காவுக்குப் பெரும் ஏமாற்றத்தை உண்டாக்கி இருக்கும் போது அவர் எவ்வாறு அனுராவைத் தலைவராககுவார் என்ற சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் எழுந்திருக்கிறது.

எனினும் திருமதி சிறிமாவோ சுதந்திரக் கட்சியில் பிளவை உண்டாக்கி, மகள் சந்திரிக்கா விஜயகுமாரணதுங்காவையும் இணைந்து புதிய கட்சி ஒன்றை உருவாக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

உட்பூசல் காரணமாக கட்சியில் பிளவு ஏற்படும் சாத்தியக்கூறு உண்டு என 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவானும் பி. பி. ஸி. யின் 'சந்தேசய' நிகழ்ச்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது ஏற்படுத்தப்பட்ட எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணி வெளியிட்டிருக்கும் அரசியல் வேலைத்திட்டத்தை ஸ்ரீ. ல. சு. தனது கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென சிறிமாவோ பண்டாரநாயக்கா விரும்புவதாகவும் —

ஆனால் கட்சிக்குள் இருக்கும் சிலர் இதனை எதிர்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது [அ-10]

## கொக்கட்டி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஓடித் தப்பி விட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொக்கட்டிச்சோலையில் நடந்த தாக்குதல் ஒன்றில் ஆறு படையினர் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பிலும் இருவர் வீரமரணம் அடைந்தனர். (அ-ஒ)

## வங்கி ஊழியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், அக். 27

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஹற்றன் நாஷனல் வங்கி வர்த்தக வங்கி ஊழியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று, இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் அறிவித்துள்ளனர். (ஒ)

## வேலணை கோட்ட மாணவர்களுக்கு!

யாழ்ப்பாணம், அக். 27

வேலணைக் கோட்டத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மாணவர்களில் ஜி. சி. ஈ. சாதாரணம் 1990, 1991 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றவிருப்பவர்களுக்கும், ஜி. சி. ஈ. உயர்தர 1991 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றவிருப்பவர்களுக்குமான துரித விசேட வகுப்புகள் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இயங்கும் வேலணைக் கோட்டப் பணிமனையில் தொடர்பு கொண்டு தம்மை பதிவு செய்யுமாறு கேட்கப்படுகின்றனர். (த)

## சைக்கிள் திருடன் பிடிபட்டான்

யாழ்ப்பாணம், அக். 27

சைக்கிள் திருட்டில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் யாழ்ப்பாணம் ஆத்திசூடி வீதியைச் சேர்ந்த மா. செல்வராசா [வயது 34] என்பவர் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டார்.

இவரிடம் இருந்து இரண்டு சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி இன்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்டச் செயலகத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

## அத்தியாவசிய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விற்போர், விசேட வைபவங்களை நடத்துவோர் ஆகியோர் தமக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களை —

பிரதேச நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்களிடம் தமது தேவையை நிரூபித்து அனுமதி பெறுவதன் மூலம் தனியார்வர்த்தகர்களிடம் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

★ ஆஸ்பத்திரிகளில் தங்கி சிகிச்சை பெறுவோருக்குத் தேவையான சீனி, தேயிலை, லக்ஸ்பிறே ஆகியவற்றை ஆஸ்பத்திரி நலன்புரிச் சங்கங்கள், வர்த்தகத் திணைக்களம் மூலம் பெற்றுக் கொள்ளலாம். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

— இவ்வாறு யாழ். செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை

### திட்ட அமுலாக்கும் மேற்பார்வையாளர்

சென்ற 21 ஆம், 22 ஆம் திகதி பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட மேற்படி எமது விளம்பரம் தொடர்பாக— விவசாயம், நெசவு வேலை, மீன்பிடி, தோல் பொருள் உற்பத்தி, தொழிற்கல்வி, வலது குறைந்தோருக்கான சுயதொழில் போன்றவற்றில் போதிய தேர்ச்சி, அனுபவம், ஆற்றல், வெளிக்கள வேலைகளில் ஈடுபாடு, வலது குறைந்தோருக்காக சேவைசெய்யும் தன்மை கொண்டோர் மாத்திரம் விண்ணப்பிக்கவும்.

இதுவரை விண்ணப்பம் அனுப்பியோருக்கும், மேலும் விண்ணப்பம் அனுப்பவுள்ளோருக்குமான நேர்முகப் பரீட்சை எமது பணிமனையில் 04-11 91 முற்பகல் 9.00 மணிக்கு நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டா.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
26-10-91

[C/0856]

# படையினர் தீவுப்பகுதி வீடுகளில் இருந்து பொருள்களை பொதி செய்கின்றனர்!

## ஐந்து நாள் அகப்பட்டிருந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், அக். 27

தீவுப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர், வழமை போலவே வீடுகளை உடைத்து பெறுமதியான பொருள்களைப் பொதி செய்து தமது வீட்டு விலாசங்களை எழுதி அனுப்புகின்றனர்.

வேலணைப்பகுதியில் படையினரிடம் சிக்குண்டு, ஐந்து நாட்கள் எவ்வித உணவுமின்றிப் பட்டினி கிடந்து, தப்பி வந்த ஒருவர் தாம் நேரில் கண்டவற்றை விவரிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேலணை பள்ளம்புலத்தைச் சேர்ந்தவர் வேலுப்பிள்ளை சதாசிவம் என்ற 68 வயது முதியவர்.

அவர் ஐந்து நாட்கள் இராணுவத்தினரிடம் சிக்குண்டிருந்த பின்னர், தமது சாதுரியத்தால் தப்பி மண்கும்பான் சென்றடைந்தார். அங்கிருந்து இரவோடு இரவாக நீந்திக் காரைதீவின் கரை சேர்ந்தார் இப்போது அவர் கொழும்புத்துறைப்பகுதியில் தமது உறவினர்களுடன் தங்கியுள்ளார்.

அவர் உதயனுக்குத் தெரிவித்ததாவது:—

யாழ்ப்பாணம் வருவதற்காக 18ஆம் திகதி (வேலணை) அராலித்துறையில், நின்ற சமயம் அங்கு வந்த இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டேன்.

என்னைத் தங்களுடன் அழைத்துச்சென்ற ஒரு குழுவினர் தமக்குக் குற்றேவல் செய்யுமாறு பணித்தனர்.

### தண்ணீருடன் கழித்தேன்

அவர்களுடன் நான் ஐந்து நாட்கள் தங்கவேண்டியதாயிற்று. முதல் நாள் உடைந்த ''பிஸ்கட்'' தான் சிறிதளவைச் சாப்பிடுமாறு தந்தனர். என்னால் அதனைச் சாப்பிட முடியவில்லை.

இரண்டொரு தடவைகள் பாணும் தந்தனர். பின்னர் சாப்பாடு எதுவும் தரவில்லை. தண்ணீரை மட்டுமே குடித்துச் சமாளித்தேன்.

படையினர் குழுக்குழுக்களாகச் சென்று வீடுகளை உடைத்து, பெறுமதியான ''ரி. வி.'', ''றேடியோ'', மணிக்கூடு, ''எவர்சில்வர்'' பாத்திரங்கள், உடுப்புகள் எடுத்து பொதிகளை கட்டித் தமது வீட்டு முகவரிகளை எழுதி அடுக்கி வைக்கிறார்கள்.

பின்னர் அவை அங்கிருந்து எடுத்துச் செல்லப்படுகின்றன. தமக்குத் தேவையில்லாதவை எனக் கருதும் பொருள்களை வீதிகளில் வீசுகின்றனர்.

ஊர் மனைகளில் வேலிகள் வெட்டப்பட்டு வெட்ட வெளியாக காட்சியளிக்கின்றது.

### ஆலயங்களில் எலும்பும் முள்ளும்

கட்டாக்காலிகளாகத் திரிந்த ஆடு, மாடு, கோழி ஆகியவற்றை பிடித்துச் சமைத்துச் சாப்பிடுகிறார்கள்.

மாமிச உணவுகளை வைத்துச் சாப்பிட்டதால் ஆலயப் பகுதிகளில் எலும்பும், முள்ளுமாகக் காட்சியளிக்கின்றன. கோவில் உண்டியல்களும், ஆலயக் கதவுகளும் உடைத்துக் காணப்படுகின்றன. — என்று அவர் விபரித்தார்.

# சுமுகமான ஒரு தீர்வையே சிங்களவர் விரும்புகின்றனர்

## இனத்துவேஷம் இனி எடுபடாது என்கிறார் சிங்களப் பத்திரிகையாளர்

லண்டன், அக். 27

''சாதாரண சிங்கள மக்கள் இனப்பிரச்சினை சுமுகமாகத் தீர்த்து வைக்கப்படவேண்டும் என்றே விரும்புகிறார்கள்.

ஆகையால் எதிர்க்கட்சிகள் தமிழர் எதிர்ப்பு பிரசாரங்களை முடுக்கி செல்வாக்கும் பெறக்கூடிய சாத்தியம் இல்லை.''

—இவ்வாறு பி. பி. ஸி தனது சிங்கள 'சந்தேசய' நிகழ்ச்சியில் ஒலிபரப்பிய பேட்டி ஒன்றில் தெரிவித்தது.

வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தத்தை வைத்துக் கொண்டு எதிர்க்கட்சிகள் மீண்டும் தமிழர் எதிர்ப்புப் பிரசாரங்களை முடுக்கி விடுமா?— என்று கேட்கப்பட்டதற்கு பத்திரிகையாளர் விக்டர் ஐவன் பின்வருமாறு பதிலளித்திருந்தார்.

சிங்கள சமூகம் தற்போது பெரிதும் மாறிவிட்டது. ஐம்பதுகளிலோ, எழுபதுகளிலோ, ஏன் எண்பதுகளிலோ இருந்த மனப்பான்மை தற்போது இல்லை. சாதாரண சிங்கள மக்கள், இனப்பிரச்சினை சுமுகமாகத் தீர்த்து வைக்கப்படவேண்டுமென்றே எதிர்பார்க்கிறார்கள். இப்போது எந்தக்கட்சியாவது இனவாதத்தை முன்னெடுக்குமேயானால் அந்தக் கட்சியை மக்கள் ஒதுக்கி வைத்துவிடவும் கூடும் — என்றார். (அ-10)

### செஞ்சிலுவைக் கொடி

யாழ்ப்பாணம், அக். 27

யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு வலய எல்லைகளை குறிப்பிட்டுக் காட்டுவதற்காக எல்லைகளில் புதிய செஞ்சிலுவைச் சங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

முன்பிருந்த கொடிகள் மங்கி பழுதடைந்து காணப்பட்டதை அடுத்து இப் புதிய கொடிகள் நேற்று முன்தினம் மாற்றப்பட்டன. (த-15)

### 20 நாட்களில் 42 ஆயிரம் கடவுச் சீட்டுக்கள்

கொழும்பு அக். 27

செப்டம்பர் மாதத்தில் 20 நாட்களில் 42 000 இற்கும் மேற்பட்ட கடவுச் சீட்டுகள் வழங்கப்பட்டதாகவும், 21 500 கடவுச் சீட்டுகள் புதுப்பிக்கப்பட்டதாகவும் குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தேவையான ஆவணங்கள் முறைபாகச் சமர்ப்பிக்கப்பட்டால் கடவுச் சீட்டுக்களை தற்போது ஒரு வாரத்திற்குள் எவரும் பெற்றுக் கொள்ள முடியும் என திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார். (த - 10)

### தேடப்பட்ட ரவி வத்தளையில் காணப்பட்டாராம்

கொழும்பு, அக். 27

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்பு, அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா கொலை ஆகியவை தொடர்பாகத் தேடப்பட்டுவரும் ரவி என்பவர் அண்மையில் வத்தளையில் காணப்பட்டாராம்.

இப்படி பாதுகாப்பு அமைச்சு நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது [இ - ந]

### சூலத்தின் மேல் விழுந்த சிறுமி ஆபத்தான நிலையில்

யாழ்ப்பாணம், அக். 27

ஆலய தரிசனம் செய்யச் சென்ற ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தி சூலத்தின் மேல் விழுந்து படுகாயமுற்றார். அவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நீர்வேலி, அச்செழுவைச் சேர்ந்த சிவகுமார் அனிதா என்ற சிறுமியே இவ்வாறு விபத்துக்குள்ளானவர்.

அச்செழுவில் உள்ள அம்மன் கோவில் ஒன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு நடந்த பூசைக்கு பிரஸ்தாப சிறுமி சென்றிருந்தார்.

சனநெருக்கடியின் காரணமாக தள்ளுப்பட்டுச் சென்ற சிறுமி, கோவில் முகப்பு வாசலில் நாட்டப்பட்டிருந்த சூலத்தின் மேல் விழுந்ததாகக் கூறப்பட்டது. [அ-15]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மரியநாயகி ஆரோக்கியநாதர் [மாணிக்கம்]

மாதகலைச் சேர்ந்த திருமதி மரியநாயகி ஆரோக்கியநாதர் [26-10-91] நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீமாம்பிள்ளை ஆரோக்கியநாதர் [இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர்] அவர்களின் அன்பு மனைவியும், Dr A E ஆரோக்கியநாதர் [Boby] [U K], A. E நவரட்ணராஜா [படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம் சுழிபுரம் ஞ்சிக்குடி], A E: I. இரட்ணராஜா [கிராம அலுவலக உத்தியோகத்தர் மண்டைதீவு] ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி மனோ ஆரோக்கியநாதர், திருமதி ராஜேஷ் நவரட்ணராஜா, திருமதி செல்வமலர் இரட்ணராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [27-10-1991] இன்று மாலை 3 மணியளவில் மாதகல் புனித தோமையார் சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாதகல் — தகவல்:
A. E. I. இரட்ணராஜா [மகன்]

(4363)

### கதிரவேலு சுப்பையா [ஓய்வுபெற்ற அதிபர்]

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வண்ணார்பண்ணை சிவன் கோவில் வடக்கு வீதியில் வசித்தவருமான கதிரவேலு சுப்பையா 26-10-91 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் யோகேஸ்வரன் [ஆசிரியர்] நகுலேஸ்வரன் [கணக்காளர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் காரைநகர்], நிமலேஸ்வரன் [வர்த்தகர்], லோகேஸ்வரன் [வர்த்தகர்], பரமேஸ்வரன் [தொழிற் பயிற்சி - விரிவுரையாளர்], பரமேஸ்வரி, கமலேஸ்வரி, இராஜேஸ்வரி, மகேஸ்வரி [ஆசிரிய கலாசாலை பலாலி] ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசோதி [சீதன் களஞ்சியம் கிளிநொச்சி], காலஞ்சென்ற கனகேந்திரம் [ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ் கொட்டடி], கணபதிப்பிள்ளை [களபூமி ஆரிசி ஆலை], கமலமலர், நாகேஸ்வரி, லலிதாம்பிகை, சசிதகுமாரி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

ஈமக்கிரியைகள் 27-10-91 ஞாயிற்றுக்கிழமை மாலை 2 00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. யோகேஸ்வரன் [மகன்]

84, சிவன் கோவில்,
வடக்கு வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

[18404]

## மரண அறிவித்தல்

### S. R. சின்னத்துரை

முன்னைநாள் யாழ். பிரபல வர்த்தகர் S. R சின்னத்துரை 23-10-1991 இல் காலமானார்.

இவர் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் அன்னதான சபையின் நீண்டகால பொருளாளரும், காலஞ்சென்ற சீதாதேவிப்பிள்ளையின் கணவரும், ஜெயநாதன் [கனடா], சந்திமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகாம்பிகை, குமரகுருபர் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற S R பரமலிங்கம், தையலம்மை, சிவக்கொழுந்து, S R கனகசபை, S R முத்தையா, S R. கோபாலபிள்ளை, விசாலாட்சி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

தகனக் கிரியைகள் [24 10 91] வியாழக்கிழமை அன்று நயினாதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No 2/1 முத்தவினாயகர் வீதி,
நல்லூர்.

தகவல்:
S. R. கோபாலபிள்ளை

[18405]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27-10-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org